# SRI RAMACHANDRA

NEWS RELEASE **INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH**

(Deemed to be University)

Porur, Chennai-600 116. Ph.: 044-23860217. www.sriramachandra.edu.in


## SRI RAMACHANDRA CONVOCATION

## DRUG CONTROLLER ASKS MEDICAL COLLEGE ADR CENTRES TO SEND ADVERSE REPORTS PROMPTLY

Chennai, 22nd April 2019.

The Drugs Controller General of India Dr. S. Eswara Reddy has asked medical colleges in which most of the 250 ADR monitoring centers have been set up to report promptly the adverse reactions as they play an important role in ensuring safety in medicines. Addressing the 29th convocation of Sri Ramachandra Institute of Higher Education and Research here today he said recently directions have been issued to manufacturers to revise safety data for various antibiotics based on the signals from the pharmacovigilance programme.Separate rules for regulation of medical devices have also been put in place. The new drugs and clinical trial rules 2019 will promote academic medical research and ensure time bound approvals for clinical trials. Approvals for new clinical trials will now be given within 30 days. We are also looking to regulate the internet pharmacies in the coming future," he added.

Dr.Reddy lamented that though India today is among the leading global producers of cost effective generic drugs and vaccines, supplying 20 percent of global demand and helped reduce drastically drug prices for HIV and Hepatitis C, we are still predominantly a generic drugs producing country. "We should focus on innovation and R & D especially in diseases relevant to uslike TB, HIV, Malaria etc. With advances in science and technology like artificial intelligence, machine learning, block chain, medicine has become technology based practice. Future of health care will be based on personalised treatments line gene therapy, stem cells, proteomics. Therefore today's medical graduates can illuminate the society and leave a permanent mark in the society if they have emerging knowledge, skill and confidence" he added.

He gave away 22gold medals to meritorious students. The Chancellor Mr.V.R.Venkataachalam conferred the degrees and distributed certificates to 452graduates including Ph.D., Super Specialties, Post Graduate, MBBS, BDS and BPT. Pro Chancellor Mr. R.V. Sengutuvan also presented certificates to students.

Earlier in his annual report the Vice ChancellorDr.P.V.Vijayaraghavan said that from the academic year 2019-20 SRIHER will offer new B.Sc courses in Radiotherapy and in Applied Psychology and M.Sc courses in Applied and Regulatory Toxicology, Respiratory Therapy Technology, Child Nursing (Nurse Practitioner in critical care), Biomechanics, Biokinetics and Mind Body Medicine. Subject to approval from MCI the deemed university will also start D.M courses in Hepatology, Clinical Immunology, Rheumatology, Endocrinology, Cardiac Anesthesia and M.Ch courses in Surgical Oncology and Hand Surgery from the academic year 2019-20.

Dr.S.P.Thyagarajan, Dean Research, Dr.Mahesh Vakamudi, Dean of Faculties, Dr.A.Ravikumar, Dean Education, Dr.S.Anandan, Dean Medical College, Dr.D.Prathiba, Controller of Examinations and Mr.V.Swaminathan, Registrar were among those who participated in the convocation.


............... For more information pl. contact..... Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations, 9940399346, 9444265578, mediarelations@sriramachandra.edu.in

NEWS RELEASE

# SRI RAMACHANDRA

**INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH**

(Deemed to be University)

Porur, Chennai-600 116. Ph.: 044-23860217. www.sriramachandra.edu.in

## ஸ்ரீ இராமச்சந்திரா பட்டமளிப்பு விழா

## மருத்துவக்கல்லூரிசார் மருந்துகள் எதிர்விளைவுகள் மையங்கள் துரிதமாக அறிக்கைகளை அனுப்ப வேண்டும் - மருந்துகள் கண்காணிப்பாளர்

சென்னை, 22 ஏப்ரல் 2019

நாடெங்கிலும் உள்ள 250 மருந்துகள் எதிர்விளைவுகள் மையங்கள் பெரும்பான்மையில் மருத்துவக் கல்லூரிகளில் அமைந்துள்ளதால் அவைகள், எதிர் விளைவுகளை உடனுக்குடன் தெரிவிப்பதன் மூலம் மருந்துகளின் பாதுகாப்பான பயன்பாட்டை உறுதி செய்யமுடியும் என்று மருந்துகள் கண்காணிப்பு இந்திய ஜெனரல் Dr. S. ஈஸ்வரரெட்டி கூறினார். அவர் இன்று இங்கு, ஸ்ரீ இராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 29வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் மேலும் கூறியதாவது :

தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மருந்துகள் பாதுகாப்பு கண்காணிப்பு திட்டத்தின்கீழ் நாட்டில் தயாரிக்கப்படும் பல்வேறு ஆண்டிபயாடிக் மருந்துகளின் பாதுகாப்பு தகவல்கள் சமீபத்தில் மருந்து தயாரிப்பாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதுபோலவே, மருத்துவ கருவிகளின் ஒழுங்குமுறை விதிகளும் வகுக்கப்பட்டுள்ளன. புதிய மருந்துகள் மற்றும் நோயாளிசார் மருத்துவ ஆய்வு விதிகள் 2019ன்படி, மருத்துவக் கல்லூரிகளில் ஆய்வுகள் ஊக்குவிக்கப்பட்டு, நோயாளிசார் மருத்துவ ஆய்வுகளுக்கு கால அட்டவணைப்படி அனுமதிகள் வழங்கப்படும். புதிய விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் 30 நாளுக்குள் தெரிவிக்கப்படும். வலைதளம் மூலம் மருந்துகள் விற்கப்படுவதையும் ஒழுங்குபடுத்தவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அடிப்படை (ஜெனரிக்) மருந்துகள் உற்பத்தியில் முன்னணி நாடுகளில் விளங்கும் இந்தியா உலகத் தேவையில் 20 விழுக்காட்டை இன்று நிறைவு செய்யும் நிலையிலும், எச்ஐவி மற்றும் ஹெபடைடிஸ் சி போன்றவற்றின் விலையை பெருமளவு குறைத்துள்ள நாம் இன்னமும் அடிப்படை மருந்துகள் தயாரிக்கும் நாடாகவே இருக்கிறோம். “நாம் ஆய்வுகள் மற்றும் புதிய மருந்துகளை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, குறிப்பாக நம் நாட்டில் அதிகமாக காணப்படும் காசநோய், எச்ஐவி மற்றும் மலேரியா போன்ற நோய்களுக்கு புதிய மருந்துகளை கண்டுபிடிக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவு, இயந்திரம்சார் அறிதல், பிளாக்செயின் போன்ற அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தால் தற்போது, மருந்துகள் தொழில்நுட்பம் சார்ந்து மிகுந்துள்ளது. இனிவரும் காலங்களில் நோய் சிகிச்சைகள் என்பது மரபணு தெரபி, ஸ்டெம்செல், ப்ரோடியோலிக்ஸ் போன்ற ஒவ்வொரு நோயாளிக்கும் தனித்தனியான சிகிச்சையாக இருக்கும். ஆகவே, இன்றைய மருத்துவ மாணவர்கள், இது போன்ற புதிதாக உருவாகி வரும் அறிவு, செய்திறன் மற்றும் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டால் நம் சமுதாயம் பிரகாசமாக இருக்கும் என்று அவர் மேலும் கூறினார்.

Dr. ரெட்டி சிறப்பாக தேறிய மாணவர்களுக்கு 22 தங்க பதக்கங்களை வழங்கினார்.பல்கலை வேந்தர் திரு. V.R.வெங்கடாசலம் பட்டங்களை அளித்து 452 மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இணை வேந்தர் திரு. R.V.செங்குட்டுவனும் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார். முனைவர் பட்டம், சிறப்பு மருத்துவத்துறை படிப்புகள், பட்ட மேற்படிப்பு, எம்.பி.பி.எஸ், பி.டி.எஸ், பிசியோதெரபி இளங்கலை மாணவர்கள் இதில் அடங்குவர்.

முன்னதாக தனது ஆண்டு அறிக்கையில் துணைவேந்தர் Dr. P.V.விஜயராகவன் கூறியதாவது: 2019-20 கல்வியாண்டுமுதல் ஸ்ரீ இராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் ரேடியோதெரபி மற்றும் அப்ளைட் சைக்காலஜி துறைகளில் பி.எஸ்.சி பட்டபடிப்பும், அப்ளைட் அண்ட் ரெகுலேட்டரி டாக்சிகாலஜி, ரெஸ்பிரேட்டரி டெக்னாலஜி, சைல்டு நர்சிங் (நர்ஸ் பிராக்டிஷனர் இன் கிரிட்டிகல் கேர்) பயோ மெக்கானிக்ஸ், பயோ கைனடிக்ஸ் மற்றும் மைண்ட், பாடி, மெடிசன் துறைகளில் எம்.எஸ்.சி பட்ட மேற்படிப்புகளும் துவங்கப்படும். இந்திய மெடிக்கல் கவுன்சில் அனுமதி பெற்று பல்கலைக்கழகம், ஹெப்படாலஜி, கிளினக்கல் இம்யூனாலஜி, ருமட்டாலஜி, எண்டோக்ரைனாலஜி, கார்டியாக் அனஸ்திசியா சிறப்பு மருத்துவப் பிரிவுகளில் DM படிப்புகளையும், சர்ஜிக்கல் ஆன்காலஜி, ஹேண்ட் சர்ஜரி ஆகிய சிறப்பு மருத்துவத்துறைகளில் M.Ch. படிப்புகளையும் 2019-20 கல்வியாண்டு முதல் துவங்க உள்ளது என்று கூறினார்.

ஆய்வுத்துறை தலைவர் Dr. S.P. தியாகராஜன், பலதுறைத்தலைவர், Dr. மகேஷ் வக்கமுடி, கல்வித்துறை தலைவர் Dr. A.ரவிகுமார், மருத்துவக்கல்லூரி முதல்வர் Dr. S. அனந்தன், தேர்வுகள் கண்காணிப்பாளர் Dr. D. பிரதீபா மற்றும் பதிவாளர் திரு. V. சுவாமிநாதன் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

---------------------------------------

மேலும் விபரங்களுக்கு....... Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations,
9940399346, 9444265578, mediarelations@sriramachandra.edu.in